**செப்டம்பர் - 16**

**"கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்." - சங் 29 : 11.**

உங்களுக்கு ஜெயிக்கக்கூடிய சோதனைகளும் பரிட்சைகளும் இருந்து அவைகள் உங்கள் குணத்தின் பொறுமையையும், அனுபவத்தையும், சகோதர சிநேகத்தையும், இரக்கத்தையும், அன்பையும் உண்டாக்குமானால் சந்தோஷப்பட்டு துதியின் ஜெயத்தையும், தெய்வீக கிருபையையும் உதவியையும் பெற்றுக் கொண்டதற்காக ஜெபத்தை ஏறெடுங்கள். உங்களுடைய சோதனைகள் நீங்கள் தாங்கக் கூடியதற்கு அதிகமாக பாரமுள்ளதாயும், உங்களை நொறுக்கிறதாயும் இருந்தால் அந்த விஷயத்தை மகா சுமைக்காரரிடம் எடுத்துச் சென்று, உங்களுக்கு நன்மை செய்கிற ஏதுவாகிலும் இருந்தால் அதை சுமப்பதில் அவருடைய உதவியை நாடுங்கள். உங்களுக்கு ஒரு நன்மையும் செய்யாததும், ஆனால் தீங்கு செய்கிறதுமான எல்லாவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ளுங்கள். **- Z '96, 163 (R 2004)**

கர்த்தர் தமது ஜனங்களுக்குக் கொடுக்கிற பெலன் ஆவிக்குரியது. அது குணத்தின் வலிமை. அதனால் எல்லாச் சந்தர்ப்ப நிலையிலும் அவருடைய சித்தத்தைச் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். உண்மையாகவே இந்த பெலன் மகிமையுள்ளதாகவே இருக்கிறது. நம்முடைய தெய்வாதினமான சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல, அதிகமாக பலமுள்ளவர்களாகும் போது, அதிகதிகமாக சமாதானத்தைக் கொடுக்கிறதும், அதை அதிகரிக்கிறதுமான உறுதியால் அவர்கள் ஆசிர்வதிக்கப்படுவார்கள். ஒரு நதியினிடத்தில் மற்ற ஓடைகள் சேரும் போது எப்பொழுதும் அது தனது ஆழத்தையும் அகலத்தையும் அதிகரிக்குமாப் போல, அவர்களுடைய சமாதானம் தேவனுடைய அதிகரிக்கும் ஈவுகளினால் முன்னைவிட ஆழமாகவும், அகலமாகவும், நிறைவானதாகவும் ஆகிறது. யேகோவாவை தங்களுடைய தேவனாய்க் கொண்டவர்கள் பாக்கியமுள்ள ஜனங்களாயிருக்கிறார்கள். **- P '26, 125.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோபு 34:9; சங் 18:2,35; ஏசா 26:3,12; 27:5; 28:12; எபே 1:19; 3:7,16; கொலோ 1:29; 2:12; பிலி 4:7,9; மத் 11:28-30; யோவா 14:1,27; ரோமா 5:1; கொலோ 3:15.**

**கோபுர வாசிப்பு : Z '11, 149 (R 4817).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவன் என்னை பலத்தாலும் சமாதானத்தாலும் ஆசிர்வதித்தாரா? எப்படி? எதனால்? பலன் என்ன?**